மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**O.S. No.96/2022**

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ஆம் தேதி புதன்கிழமை

வா.சா.2 ( இருளப்பன் )

கு.வி ( பிரதிவாதிகள் தரப்பில்)

தாவா சொத்து உள்ள பகுதியில் எத்தனை வருடங்களாக குடியிருக்கிறீர்கள் என்றால் 40 வருடங்களாக குடியிருக்கிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா அல்லது தன்னிச்சையாக வந்தீர்களா என்றறல் அழைப்பாணை வரவில்லை தன்னிச்சையாக வந்தேன். வாதி உஷாவின் தாயார் தேவிகா கேட்டதற்கிணஙக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களுக்கு யார் வழக்கறிஞரிடம் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். நான் சாட்சி கையெழுத்திட்டதாக சொல்லப்படும் பத்திரம் எந்த வருடம் கையெழுத்து செய்தீர்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்துக்கு எந்த திசையில் உள்ள இடத்தை வாதி வாங்கியது நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள 13 செண்ட் இடம் மற்றும் தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள 6 செண்ட் ஆகிய இடத்திற்கான பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். நான் சாட்சி கையெழுத்திட்ட பத்திரமான 13 செண்ட் யாரிடமிருந்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் கோவிந்தனிடமிருந்து கிரையம் வாங்கப்பட்டது. மேற்கண்ட விபரங்களை தான் நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்கு மூலத்தில் உள்ளது என்றால் சரிதான். 6 செண்ட யாரிடம் கிரையம் வாங்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 6 செண்ட் இடம் தாவா சொத்திற்கு எந்த திசையில் உள்ளது என்றால் தாவா சொத்தான பாதைக்கு தெற்கு பக்கம் உள்ளது. தாவா சொத்தான பாதை எத்தனை அடி என்றால் 8 அடி. நான் சாட்சி கையெழுத்து செய்த வா.சா.ஆ.4 கிரைய பத்திரத்தில் 8அடி கிழமேல் ஓடிய பொதுப்பாதைக்கும் தெற்கு என கண்டுள்ளது என்றால் சரிதான். அதே பத்திரத்தில் 8அடி அகல பொதுப்பாதை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி கிரையம் வாங்கிய இடத்திற்கும் தெற்குபக்கம் உள்ள

பொதுப்பாதை சம்மந்தமாக பிரச்சனையா அல்லது வடக்கு பக்கம் உள்ள பொதுப்பாதை சம்மந்தமாக பிரச்சனையா என்றால் தெற்கே 8அடி உள்ள பாதையில் தான் பிரச்சனை உள்ளது. வா.சா.ஆ.4 கிரைய பத்திரத்தில் பொதுப்பாதை என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கு மற்றும் தெற்கு பக்கம் உள்ள பகுதியை தான் வாதி கிரையம் வாங்கினாரே தவிர பொதுப்பாதையை கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான், பொதுப்பாதையை கிரையம் வாங்கவில்லை. வா.சா.ஆ.6 தான செட்டில்மெணட் ஆவணத்தை கிருஸ்ணன் உஷாவிற்கு எழுதிக்கொடுத்ததை பார்த்துள்ளீர்களா என்றால் நான் பார்த்ததில்லை, எனக்கு தெரியாது. அது பற்றிய விபரம் வழக்கறிஞரிடம் சொல்லவில்லை என்றர்ல் சரிதான். தாவா சொத்திற்கு எந்த பக்கத்தில் வாதியின் கணவர் பெயரில் வீடு உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள 8அடி பாதையை வாதி அடைக்க முற்பட்டதால் தான் தரப்பினருக்கிடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அதுசம்மந்தமா போலீசார், வருவாய்துறையினர்கள் வந்து பார்த்தார்கள் என்றால் சரிதான், ஆனால் வருவாய்துறையினர் மட்டும் வந்தார்கள், போலீசார் வரவில்லை. தாவா சொத்திற்கு மேற்கே குவாரி உள்ளது அதை தாண்டி தான் மானாமதுரை சிவகங்கை வழிசெல்லும் தார்ரோடு உள்ளது என்றால் தாவா சொத்திற்கு மேற்கே 1கி.மீ சென்றால் மானாமதுரை சிவகங்கை வழிசெல்லும் தார்ரோடு உள்ளது. 1கி.மீ தொலைவு இல்லை 1பர்லாங் சென்றால் தான் மானாமதுரை சிவகங்கை வழிசெல்லும் தார்ரோடு உள்ளது என்றால் சரியல்ல. குவாரி இடம் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துள்ள பகுதிக்கு கிழக்கு பக்கம் உள்ளவர்கள் மேற்கே உள்ள சிவகங்கை, மானாமதுரை தார்சாலையில் தயாபுரம் பேருந்து நிறுத்தத்தை அடைவதற்கு தாவா சொத்தின் வழியாக சென்று அரசு குவாரி இடத்தை தாண்டி செல்லவேண்டும் என்றால் சரியல்ல. அவசரத்திற்காக அந்த வழியே செல்வார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து பாதையை தான் அந்த பகுதி மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 கிரைய பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை வாதிக்கு கிரையம் வாங்கிகொடுத்த தரகர் என்ற முறையில் அதிகமான கமிசன் தொகையை பெற்றுக்கொண்டதால் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பாதையை தான் அந்த பகுதியில் உள்ள மக்கள் பொதுப்பாதையாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தான பொதுப்பாதையை

வாதி எந்தவிதமான கிரையம் மற்றும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் அடையாத நிலையில் தாவா சொத்தான பாதையை வாதி அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை